16.06.2026.

O.S.No. 56/2019

PW1– இஸ்மாலி – க/பெ. நாகூர் ஹனிபா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

குறுக்கு விசாரணை : ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. பிரதிவாதி வீடு வடக்குபக்கமாகவும், எங்கள் வீடு தெற்குபக்கமாகவும் உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு தென்பக்கமாக பிள்ளையார் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்குபக்கமாக ஆறுமுகம் வகையறா வீடு உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி, எனது முன்கிரையதாரர்கள் மேல் வழக்கு தாக்கல் செய்து, என் வீட்டின் அடிப்பகுதியை கழிவுநீர் செல்வதற்கு மடை ஏற்படுத்தி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.17/2010 ல் தீர்ப்பாணை ஏற்பட்டு, அது நிறைவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனக்கு உண்மை தெரிந்தே எனகது தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது பத்திரத்தின்படியும், பிராதின் சொத்துவிவரத்தின்படியும் எனது சொத்தின் தென்வடல்அளவு 15.5 அடி என்றால் சரிதான். அதற்கு அடுத்த வடக்குபக்கமாக தான் கிழமேலாக நான் சொல்லும் 2ம் தபசில் பொதுப்பாதை உள்ளது என்றால் சரிதான்.

4. 1,2 பிரதிவாதிகளின் உடன்பிறந்த மற்றொரு சகோதரர் பெயர் பொன்னம்பலம். பொன்னம்பலத்தின் மகன் உலகநாதன் கிரையம் வாங்கி, அவரிடமிருந்து ஆறுமுகம் கிரையம் பெற்று,அவரிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

5. எங்களுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பே பிரதிவாதிகளின் தகப்பனார் பிரதிவாதிகள் இருவருக்கும் நன்கொடை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பொதுப்பாதை. மேற்படி நன்கொடை ஆவணத்தில் தென்வடல்அளவு 62 அடி என கூறப்பட்டுள்ள நிலையிலும் அதன் தென்பக்க எல்லையாக அதன் கையிருப்பு நிலம் தான் அவரது பேரன் உலகநாதனுக்கு வந்து, அதன் மூலம் எங்களுக்கு வந்துள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவரது கையிருப்பு தென்வடல் 15 ½ அடி மட்டுமே என்றும், அதைதான் அவர் எங்களுக்கு எழுதிக்கொடுக்க முடியும் என்றும், 2ம் தபசில்சொத்து பொதுப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ள ஆவண சொத்து, பிராது 2ம் தபசில் சொத்து என்பது 1,2 பிரதிவாதிகளுக்குரிய நன்கொடை சொத்து என்றால் சரியல்ல. எனவே சொத்துரிமை மாற்றுச்சட்டப்படி வழிப்பாதை பற்றி நான் செய்யும் கட்சி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**